காஞ்சி

நிறுவனர்: அறிஞர் அண்ணா

14 - 10 - 1973

மலர் : 10 ★ இதழ் : 14

★

உள்ளே......

மலர் மணம்
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

அமைதி நிலவட்டும்
(தலையங்கம்)

★

குறளமுதம் - 1
(கட்டுரை)

★

இது ஒன்றும் பாரமல்ல
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

எழுச்சி

பாவேந்தர் பாரதிதாசன்

தமிழனே இது கேளாய்—உன்பால்
சாற்ற நினைத்தேன் பல நாளாய்
கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு;
காணும் பிற மொழிக ளோவெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
நம்உரிமைதனைக் கடித்த தப் பாம்பு
　　தமிழனே இது கேளாய்.

தனித்தியங் கும்தன்மை தமிழனுக் குண்டு;
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு
　　தமிழனே இது கேளாய்

வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம்; இந்நாள் அவரஞ்சி விழித்தார்
　　தமிழனே இது கேளாய்.

விலை : 0-25 காசு

குறளமுதம் - I

மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,

வாழ்வுக்கு வழிகாட்டுவது குறள்.

வழிகாட்டும் வள்ளுவர், வையத்திற்கு அறிவு ஒளி கூட்டும் ஒப்பற்ற பெரும்புலவர்.

வள்ளுவரின் பணி, வாழ்க்கையைப் படம் பிடிப்பது மட்டுமன்று—பண்படுத்துவதாகும்!

வாழ்க்கையை விளக்குவது மட்டுமன்று—விளக்கம் பெறவைப்பதுமாகும்!

தீய வாழ்க்கையைத் திருத்தும் தூயபணியினைத் துணிவோடு மேற்கொண்ட தொல்லுலக நல்லாசான் வள்ளுவரின் குறள், வையத்து மக்களையெல்லாம் வாழவைக்கும் வற்றாத அமுத ஊற்றாகும்!

குறிப்பிட்ட சமயக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தவர் வள்ளுவர் அல்லர். அனைத்துச் சமயங்களின் தூதுவராகச் சுதந்திரவானில் சிறகடித்துப் பறந்தவர் அவர். எச் சமயத்தவர்க்கும், எந்நாட்டவர்க்கும், எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் குறளமுதம் வடித்துத்தந்த கோமான் அவர். அதனாற்றான் இவ்விருபதாம் நூற்றாண்டின் நவீன வாழ்வுக்குத் தேவைப்படும் தன்மையில் தெய்வப் புலவரின் திருக்குறள் அமைந்திருக்கிறது. அக் குறள் அமுதத் துளிகளால், தெளிவு பெற்றோர் பலர், தெளிவு பெறவேண்டிய நிலையில் இருப்போர் பலர்.

அமுதம், ஆயுளைப் பலப்படுத்துமாம். குறளமுதமோ, உள்ளத்தைப் பண்படுத்தும், அதில் ஐயமில்லை. உள்ளம் என்றால், கள்ளம் இல்லாமல் இருக்க வேண்டும். மனம் என்றால் மாசு இல்லாமல் இருக்க வேண்டும். மாசு என்றால் குற்றம். மனத்திறகு மாசு எது? தீய நினைவுகள் அத்தீய எண்ணங்களே இல்லாத தூய மனம் வேண்டும். அறம் என்பதும் அவ்வளவுதான்! குறள் கூறுவதும் அதுவேதான்!

மனம் தூய்மையாக இருக்கவேண்டுமெனில், அழுக்காறு கூடாது. அழுக்காறு தோன்றின் அதன் மூலம் ஆசை எழும்; சினம் பிறக்கும்; கொடுஞ்சொல் கூறவேண்டி வரும்! ஆக, அனைத்துக் குற்றங்களுக்கும் அடிப்படை, அழுக்காறு ஒன்றுதான்! அதனை நீக்குவதின்மூலம் அனைத்துக் குற்றங்களையும் எளிதில் போக்கி விடமுடியும்.

அழுக்கு—ஆறு எனப் பிரித்து 'அழுக்குவழி' எனப் பொருள் உரைப்பினும் தவறாகாது. அழுக்கு எனில் குற்றம். ஏனிய குற்றங்கள் அனைத்திற்கும். வழியாக அமைவதே, 'அழுக்காறு' ஆகும். ஆகவே, மனத்தில் இம் 'மாசு' இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, மானிடராய்ப் பிறந்த அனைவரின் கடமையாகும்.

இதோ, அழுக்காறு உடைமையால் வரும் குற்றம் பற்றி அவர் கூறும் குறள் அமுதம்:-

"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்"

பொறாமை நெஞ்சங்களைச் சுட்டுப் பொசுக்கும் அறிவுச் சுடரன்றோ, இது? ஆம்! அழுக்காறு உடையவனுக்கு விடுக்கும் எச்சரிக்கைக்குரல்! பிறர் சீரும் சிறப்புமாக வாழ்வதைக் கண்டு அன்பு உடையவர், மனம் மகிழ்வர்! ஆனால், அழுக்காறு உடையவர்...? மனம் பொறுக்காமல் புழுங்கிப் புலம்புவர். அங்ஙனம் 'மனம் புழுங்கி'த் திரியும் பொறாமைப் பிண்டங்களைக் கண்டு, விலகித் திருமகள்கூட காததூரம் கடுகிச் செல்வாளாம். பொறாமைப்படுகின்றவனைக் கண்டால், செல்வ மகளும் பொறாதவள் ஆகிவிடுவாளாம்.

குளுமையான இடம் தேடிக் குடியிருக்கும் குலமகள், எரிச்சல் கொண்டவன் இதயத்திலா இனிதாகத் தங்கி மகிழ்வாள்? பொறாமைப் படுகின்றவனின் இதயமே, எரிச்சலின் மறுவடிவம்தானே!

அத்தகையவனிடம் செல்லுமாறு தன் தமக்கைக்கும் வழிகாட்டுவாளாம், செல்வமகள். சீதேவி செல்வத்திற்குத் தலைவி! அவள் தமக்கை மூதேவியோ, வறுமைக்குத் தலைவி! இப்படி ஒரு கதை!

பொறாமைப்படுகின்றவனோடு, சீதேவி இருக்க மாட்டாள்; மூதேவிதான்தான் இருப்பாள் என்பது இக்கதை அடிப்படையில் வள்ளுவர் காட்டும் அறநெறி. என்ன பொருள்? எந்நேரமும் பிறர்மேல் பொறாமை கொள்ளும் ஒருவனால், தன் முயற்சியில் எங்ஙனம் ஈடுபட்டுப் பொருள் ஈட்ட முடியும்? ஆதலால் அவனிடம் செல்வம் தங்காது! செல்வம் தங்காது நீங்கும் எனில், இல்லாமையும் வறுமையுமே வந்து சேரும். வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் இன்றி, சோம்பலுக்கு ஆட்பட்டு, வறுமைக்கும் பிணிக்கும் அடிமைப்பட்டு, மூதேவியின் பிடியில் அகப்பட்டு அல்லற்படும் நிலைதான், 'அழுக்காறு' என்னும் பொறாமைக்குக் கிடைக்கும் பரிசாகும் என்பதை தெரிந்து—தெளிந்து வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே வள்ளுவரின் பேரவா ஆகும். ஆதலால் பொறாமைப் படுவதால் எவ்வித பயனும் இல்லை; பொறாமைப் படுவோனிடம் செல்வம் வந்து சேராது; சேர்ந்தாலும் நிலைத்து நிற்காது! அழுக்காறு உள்ளவன் வாழ்வில் வறுமைதான் கொஞ்சும்! வாட்டம்தான் மிஞ்சும்!!

இதுவே, குறள் கூறும் வழி! இக் குவலயம் போற்றும் நெறி"

நன்றி: சென்னை வானொலி நிலையம்.
(ஒலிபரப்பான நாள்: 16—4—73 காலை 6-04.)

அடுத்த கிழமை 'காஞ்சி' இதழில்
பேராசிரியர் மு. பி. பா. அவர்களின்
குறளமுதம் - 2. இடம் பெறும்.

"காஞ்சி"

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 14—10—73 | இதழ் 14

அமைதி நிலவட்டும்

இன்று உலகில் உள்ளோர் கண்களெல்லாம் ஒரே திசையைத்தான் உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன.

செவிகள் எல்லாம் ஒரே செய்தியில்தான் அதிக கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

பத்திரிகைகள் எல்லாம் பத்தி, பத்தியாக வெளியிடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்று விட்டசெய்தியும் அதுவாகத்தான் ஆகி விட்டது.

தொடங்கியபோது வியப்படைந்த உலகம், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வேதனையின் விளிம்பில் வெதும்பிக் கொண்டிருக்கிறது.

என்ன ஆகுமோ? என்ற பய உணர்வு அனைவரையும் ஆட்கொள்ளத் தொடங்கி விட்டது.

எகிப்திற்கும் இசுரேலுக்கும் இடையே இருக்கும் 'பிரச்சனை' என்று, யாரும் எளிதாக எண்ணிவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

பிரச்சனை பிரச்சனையாக இருக்கின்ற வரையில் பிரச்சனையே இல்லை. ஆனால், அதுவே பெரிய அளவுக்கு வெடிக்கின்ற போது, அதனால் துடிக்கின்றநிலை பலருக்கும் ஏற்படுகின்றதன்றோ?

விசுவரூபம் எடுக்கின்றபோது, அதனைத் தடுக்கின்ற ஆற்றல் இன்றித் தடுமாறும் நிலை உருவாகின்றதன்றோ?

ஆம்! எகிப்திற்கும் இசுரேலுக்கும் இடையே பலநாட்கள் அமுந்திக்கிடந்த பகையுணர்ச்சி விசுவரூபம் எடுத்துவிட்டது. போர் வெடித்து விட்டது.

அது, உலகப் போராக வெடித்துவிடக் கூடாதே, என நல்லவர்கள் இதயம் ஏங்கத் தொடங்கிவிட்டது.

எகிப்து, சிரியாவிற்குப் பக்கபலமாக அரபு நாடுகள் பல, 'வரிந்து' கட்டிக்கொண்டு வருகின்றன. சோவியத் வல்லரசு, தன் முழு ஆதரவும் எகிப்திற்கே என்ற பிரகடணம்.

அமெரிக்க வல்லரசோ இசுரேலுக்கு ஆதரவாய் முழுமூச்சாகச் செயல்படும் நிலை.

எகிப்திற்கு ஆதரவாக சோவியத் போர்க் கப்பல்களும், இசுரேலுக்கு ஆதரவாக அமெரிக்கப் போர்க்கப்பல்களும் மத்தியதரைக் கடற் பகுதிகளில் 'உலா' வரும் காட்சி.

உலகப்போராக மாறிவிடும் சூழல் ஏற்பட்டுவிட்டதே, என்ற உலக மக்களின் கவலைக் கிடமான நிலை.

அமைதி நிலவப் பாடுபடும் ஐ. நா. மன்றம், பரிதாபத்தற்குரிய நிலைக்கு ஆளாகிவிடுமோ என்ற அச்சம்.

ஐ. நா. மன்றத்திற்குப் பக்கபலமாக இருக்கும் வல்லரசுகளே, அழிவுப் போருக்கும் பக்கபலமாக இருக்கும் விந்தை.

கடந்த உலகப் போரில் அணுகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகிய 'ஈரோசிமா, நாகசாகி', அதற்குள்ளா மறந்து விட்டது? அங்கு இன்றளவும் குழந்தைகள் ஊனமாகவே பிறக்கின்றன வாமே! அணுத்துகள் பரவிய நச்சுக்காற்றின் கொடிய தாக்குதலுக்கு, ஆளாகி இன்றளவும் மக்கள் அவதிப்படுகின்றனராமே!

இவற்றையெல்லாம் நினைவிற்கொண்டு, வல்லரசுகள் அமைதி நிலவத் துணைபுரிய வேண்டும். குழந்தையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற 'திருப்பணி'யினை இத்தோடு முடித்துக்கொண்டு, உலக அமைதிக்கு உண்மையாகவே வல்லரசுகள் பாடுபட முன்வரவேண்டும்.

அதுதான் உலகத்துக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது.

"தூய உள்ளம் அன்பு உள்ளம் பெரிய உள்ளம்; **தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே** என்னும் தாயுள்ளம்" கொண்டு உலக அமைதியைப் பேணவேண்டும்; இன்பம் காணவேண்டும்!

—**மணிவேந்தன்.**

அலெக்சாண்டர் வணங்கிய ஆசிரியன்!

கவிஞர் பல்லவன்

கீர்த்திமிகு கிரேக்கத்தின் அரண்மனைக்குள்
கீழ்வானக் கதிருதிப்பு! மனித அச்சில்
வார்த்தெடுத்த செம்பவழச் சிலைவனப்பு!
வரலாற்றின் கருவுயிர்ப்பு! புலிபிறப்பு!
ஆர்த்தெழுந்து நாடுகளை அடிமை கொள்ள
அவதரித்த அலெக்சாண்டர் பிறந்த நாளைத்
தேர்ப்போட்டித் திருநாளாய் விழாவெ டுத்தான்
தேக்குத்தோள் பிலிப்பரசன் உலகம் வாழ்த்த!

ஓமர்தந்த காவியத்தைச் சுவைக்கும் போதே
உயிரினிக்கும்; உளமுவக்கும்! அதனை வெல்ல
நாமணக்கும் யாழ்மழலை மீட்ட வந்த
நன்முகத்தை, மரகதத்தை, மாணிக் கத்தைப்
பூமணக்கும் தொட்டிலிடும் போது பிள்ளை
புன்னகையைக் கண்டள்ளி அறிஞர்க் கெல்லாம்
மாமழைபோல் பொன்னீந்தான் கிரேக்க வேந்தன்!
மகப்பேற்றைப் புதையலெனச் சுமந்து
சொன்னான்

மடியேந்தி முத்தமழை பெய்வ தற்கே
மனம்மயக்கும் ஓவியத்தை அரசி தந்தாள்!
விடிகின்ற பொழுதழகை வியந்துநோக்கி
விரிகின்ற மலர்போல்நான் இன்புற் றாலும்
முடிக்குரிய குலக்கொழுந்து தளிர்த்த ஞான்று
மூதாசான் அரிஸ்டாட்டில் இருப்பதாலே
ஓடிசியெனும் உயர்நூலை நவிலுந் தோறும்
உயிர்மகிழ்ந்து குதிப்பதுபோல் உவந்தேன்
என்றான்!

ஈட்டிமுனை கேள்விகளால் அறியாமைப்பேய்
இதயத்தின் துடிப்படைக்கி எழில்சேர் இந்த
நாட்கத்தில் பகுத்தறிவு விருந்து வைத்த
நாயகனை, சாக்ரடீசை, நரிகள் சூழ்ந்து
வாட்டியுயிர் வதைத்தன்று நஞ்சளித்து
வையகத்தின் பழியேற்றுக் கொண்ட பின்னர்
ஏட்டமுதை இளைஞர்க்கும் ஊட்டி வந்தான்
எழுச்சிதரும் அரிஸ்டாட்டில் அறிவுத் தங்கம்!

புகையெழுப்பி இறைவணக்கும் நாளில் மிக்கப்
புகைபரப்பி அலெக்சாண்டர் துதித்த போது
மிகைசினத்தோ டரிஸ்டாட்டில் கொதித்து
ரைத்தான்
மிக்குயர்ந்த கிரேக்கத்தின் பொருளை யெல்லாம்
தொகைதொகையாய் பாரசீகர்
கொள்ளைகொள்வர்
தூபப்பொருள் விற்பனையால்! மன்ன னாகிப்
பகைவென்று பாரசீக நாட்டி னைநீ
பற்றுங்கால் பயன்கொள்ளேன் அதிக மென்றான்

ஆசானின் கடிந்துரையால் உணர்ச்சி யுற்று,
அமர்க்களத்தில் பாரசீகப் பகைமுடித்து
வீசுமண மட்டிப்பால் களஞ்சி யத்தை
விழிதிறந்த அரிஸ்டாட்டில் முன்கு வித்து
மாசில்லா ஆசிரிய! நீங்கள் தந்த
மானவுணர் வால்மன்னர் மன்ன னானேன்!
ஆசிகளை வழங்கிடுவீர்! எனப் பணிந்தே
அலெக்சாண்டர் மண்டியிட்டு வணங்கினானே!

இந்த நாட்டிற்கு நிரந்தரமான செல்வத்தைத் தேடித்தருபவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால் அது ஆசிரியர்கள்தான். நிலையான செல்வத்தைத் அழியாத செல்வத்தை, விலை மதிக்க முடியாத செல்வத்தைத் தேடித் தரும் ஆசிரியர்களை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்.

ஃ ஃ ஃ

பேசாமல் இருப்பது வேண்டுமானால் சிரமம்—சிந்தையை அடக்கியே சும்மா இருப்பது அரிது—ஆனால் பேசுவது எளிது பேசுவதை, ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப்படுத்துவதுதான் மேடை பேச்சு.

—அறிஞர் அண்ணா

ஃ ஃ ஃ

பெண்கள் பேரீச்சம் பழத்தைப்போன்றவர்கள். பழத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைக்க வேண்டும். நறுக்கென்று கடித்தால், கொட்டை, பல்லை உடைத்துவிடும்.

—காண்டேகர்

தொகுப்பு: கே. எஸ். ராஜன்

தம்பி

சிரித்திடும் முல்லையைப் பறித்திடும்போது அதனைத் தன்
உள்ளம் வென்ற எழிலுடையாள் ஏற்றுக்கொள்வாள்; மனம் கண்டு
மகிழ்வாள்; எழில் எழிலுடன் சேர்ந்திடும் என்ற எண்ணம் கொள்ளாத
காதலன் உண்டா!

வாளினை வடித்தெடுத்துக் கொடுத்திட உலைக்கூடத்தினில்
பணிபுரிவோன், இந்த வாள் வீரன் கரம்சேர்ந்து, அக்ரமத்தை வெட்டி
வீழ்த்தப் பயன்படும், உரிமை காத்திடத் துணைநிற்கும் என்ற நம்பிக்கைப்
பெற்றிடும்போதுதானே, அவன் வேலைத்திறன் நேர்த்திமிக்கதாகும்?

சொல்லழகும் பொருளழகும் இழைந்துள்ள நற்கவிதை
இயற்றிடுவோன் அக்கவிதையினைச் சுவைத்திட, பயன்பெற்றிட இசைந்து
வந்திடுவோர் உளர் என்ற உணர்வினைப் பெற்றாலொழிய உள்ளத்தி
லிருந்து கவிதா சக்தி சுரந்திடுமா?

மலர் மணம்

எடுத்துக்கொள்ளும் எந்தச் செயலினையும் பாராட்டி வர
வேற்றிடவும், ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளவும் தக்கார் உளர், என்ற
எண்ணம், மேற்கொள்ளும் செயலினைச் செம்மையானதாக்கிடுமல்லவா?

தாயின் அன்பினைப் பெற்றிட வாய்ப்பற்ற குழந்தை எத்தனை
அழகுடன் விளங்கியும், பயன் என்ன!

இதழ் நடாத்தப்படுகிறது, மலர் வெளியிடப்படுகிறது, ஆயினும்
அவற்றினைப் பெற்றிடுவதில் மகிழ்ச்சியும், பயன்பெறுவதில் சுவையும்
தேடிடுவோரின் தொகை மிகுதியாகவும், வளர்ந்தவண்ணமும் இருந்தா
லொழிய, எண்ணங்களை வடித்தெடுத்து இதழிலும் மலரிலும் தந்து
வருவது எற்றுக்கு என்ற ஏக்கமல்லவா மனதினைக் குடைந்திடும் என்பது
பற்றிய எண்ணம், இவைபற்றிய நினைவினைக் கொண்டு வந்து சேர்த்தது.



ஆனல் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அத்தகைய கவலை குடைந்திடும் நிலையினை மூட்டி விடவில்லை; 'காஞ்சி' இதழினுக்குத் தொடர்ந்து நல்லாதரவு அளித்து வருகின்றனர். மகிழ்ச்சி நன்றி.

'காஞ்சி' இதழும், கழகக் கருத்துக்களைப் பரப்பி வரும் மற்றைய இதழ்களும், முழுக்க முழுக்கத் தம்மைக் கழகத்திடம் ஒப்படைத்து விட்டவர்களால் நடத்தப்பட்டு வருவதாகும்.

ஏழெட்டுத் துணையாசிரியர்கள், மூன்றுநான்கு ஓவியர்கள், சுறுசுறுப்புமிக்க விளம்பரத்துறைக் குழுவினர், ஆகியோர் புடைசூழ ஆசிரியர் அமர்ந்த படி, கண்களை மூடியபடி இந்த இதழில் என்ன வண்ணம் காட்டிடலாம், எந்தச் சுவையைக் கூட்டிட லாம் என்று சிந்தித்துப் பார்த்து, எழில் ஏடுகள் பலவற்றினை ஒப்பிட்டுப் பார்த்து, வனப்புமிக்க விதமான இதழினைத் தந்திடும் வகை காண்பது என்பதெல்லாம், வேறு இதழ்களில்; கழக இதழ் நடாத்துவோர் மாலையில் மன்னுர்குடி, காலையில் காட்பாடி, மறுநாள் போடி, மற்றெர் நாள் சேலம், பிறிதோர் நாள் ஈரோடு என்ற முறையில் சுற்றிச் சுழல்பவர்கள். உடலிலே அலுப்பு ஏற்படும் என்ப தனை எடுத்துக்காட்ட இதனைக் கூறிவிடவில்லை; ஓய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு நிம்மதியாகச் சிந்தித்து இதழினுக்குச் சுவை கூட்டிடும் நிலையில் உள்ளவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டத் தான்.

பிற இதழ் நடாத்துவோர் போல, இதனையே தமது முழுநேர வேலையாகவோ, முதல்வேலை யாகவோ கொண்டவர்கள் அல்லர்.

கழக இதழ் நடாத்துவோர் மேற்கொண்டுள்ள பணி, ஒரு புத்தரசு காண்பது; அதற்குத் தக்கவித மான பாசறையாகக் கழகத்தை வலிவுள்ளதாக்குவது

அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள் வதற்கு அவர்கள் தேடிக்கொள்ளும் படைக்கலன் களில் ஒன்று, இதழ்!

அந்த படைக்கலன் வண்ணம் மிக்கதாக விளங் கிடச் செய்திட வேண்டுமே என்பதிலே மட்டுமே தம்மை ஈடுபடுத்திக்கொள்ள இயலாத நிலையினர்.

ஆனல் அதேபோது அந்தப் படைக்கலன், பயன் தரத்தக்கதாக இருந்திட வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக உள்ளவர்கள்.

இந்தநிலை காரணமாக இதழில் எழிலினை மிகுதியாக்கிட, கண்களைக் கவரத்தக்க வடிவம் கொடுத்திட முடிவதில்லை.

இதழ் நடத்துவது ஒன்றைமட்டுமே மேற் கொண்டிடின், எழில் ஏடு என்று எவரும் வியந்து பாராட்டிடத்தக்க முறையினில், நமது கழகத் தோழர் எவரும் இதழ் நடாத்திடலாம். இயலாத ஒன்று அல்ல! ஆனல் நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளவும் தன்மையும் நம்மை ஏட்டுக்கு எழிலூட்டும் வேலையிலே மட்டுமே நாம் பிணைந்து விட இடம் தருவதில்லை.

இந்த நிலையிலும், கூடுமான வரையில், இதழிலே பொலிவு விளங்கிடச் செய்வதில், இளங்கோவன் ஈடுபட்டு, 'காஞ்சி' இதழினுக்கு ஒரு கவர்ச்சி கிடைத் திடச் செய்துவருவதனைப் பலர் பாராட்டிடக் கேட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

'காஞ்சி' இதழின் இந்த இரண்டாம் ஆண்டு மலர், எழில்மிகு வடிவம் பெற்றிட முனைந்து பணியாற்றி அனைவருக்கும் அகமகிழ்ச்சி அளித்திடு வதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கும் நிலையினைக் காண்கின்றீர்கள்.

மலரில், இடம்பெற என்னிடமிருந்து கட்டுரை களைப் பெறுவதென்பதே ஒரு தனிக்கலை! சற்றுக் கடினமான கலையுங்கூட!

கட்டுரைகளை—அதிலும் மலருக்கு என்று தனித் தன்மை வாய்ந்த கட்டுரைகளை—எழுதிட எனக்குக் கிடைக்கும் நேரமே நள்ளிரவுக்கும் விடிவதற்கும் உள்ள நேரம்—அதிலேயும் கழகத் தோழர்கள் தங்கள் பிரச்சினைகளுடன் வராதிருந்திடின்.

ஆனல் இந்த நிலையிலும் இதழ் மூலம் என் உடன் பிறந்தாருடன் தொடர்புகொள்வதிலே எனக்குள்ள பேரார்வம், என்னை எப்படியோ பணி புரியச் செய்கிறது.

ஒவ்வொன்றையும் கூறிவிடவேண்டும், கூறிடும் ஒவ்வொன்றும் முழு அளவினதாக இருக்கவேண்டும் என்ற துடிப்பு எனக்கு.

கூறித் தீரவேண்டியவைகளோ மிக அதிகம் அளவில்; அந்த அளவு வளர்ந்துகொண்டும் வருகிறது.

உலக நடவடிக்கைகளைப்பற்றி, உள்ளத்து எழும் உணர்ச்சிகளைப்பற்றி, ஊராள்வோர் போக்கு பற்றி, அதனை மாற்றியாகவேண்டிய முறைபற்றி, கூறிட ஆயிரம் உள.

பிரச்சினைகள் கூவிக்கூவி அழைக்கின்றன.

எந்தக் கருத்துக்கும் இனிமை சேர்த்திட, நான் உளேன் காண்க! என்று தமிழ் இலக்கியம் அழைக் கிறது.

ஆதிக்கத்தை எதிர்த்திடும் ஆற்றலை மக்களிடம் எழச்செய்திட வேறு எதுவும் செய்திட வேண்டாம், நான் உள்ளடக்கி வைத்துக் கொண்டுள்ள கருத் தோவியங்களைப் பார், அவைகளைப் பக்குவப்படுத்தித் தந்திடு, அதுபோதும் என்று வரலாற்றுச் சுவடி கூறுகிறது.

கூறவேண்டியதற்கு வண்ணம் தேவையா, நல்வடிவம் தேவையா, நாடக வடிவினில் கொடுத் திடு, படிப்போர் உள்ளத்தைத் தொடும் என்று கூறுகிறது ஒருகுரல்!

கதை வடிவம் கொடு, எந்தக் கருத்தும் எளிதா கிடும், இனிப்பளித்திடும், இதயம் சென்று தாக்கிடும் என்று கூறுகிறது! ஒருகுரல்!

ஒன்றல்ல இரண்டல்ல, பலப்பல உள, எனக்கு ஆவலூட்டுபவை.

ஆனல் நானே, கூறவேண்டியவைகளைக் கூற வேண்டிய முறையில் கூறியிருக்கிறேம் என்ற பெரு மிதம் கொண்டிட முடியவில்லை; முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேம் என்று மட்டுமே கூறிடமுடி கிறது. ஆனல் அந்த நிலையே ஓர் தனித்தன்மை

வாய்ந்த மகிழ்ச்சியினைத் தருகிறது. காரணம், வடிவம் வண்ணம் எந்தத் தரத்தில் உளது என்பது பற்றி அதிகம் பொருட்படுத்தாமல், நமக்குத் தேவைப்படுவனவற்றினை, நம்முடைய தோழமையிலே மகிழ்ச்சி தந்திடும் அண்ணன் தருகின்றான் என்ற பற்றுடன், இதழினை வரவேற்றிடும் ஆயிர மாயிரம் தோழர்கள் உளர் என்பதுதான்.

'காஞ்சி' இரண்டாம் ஆண்டு மலரும் அதேவித மான வரவேற்பினைப் பெற்றிடும் என்பதனை உணரு கின்றேன்; மகிழ்ச்சிகொள்கின்றேன்.

இந்த மலரில் நெடுங்கதைகள் என்று சொல்லத் தக்க அமைப்புடன், இரண்டு கருத்தோவியங்களைத் தந்துள்ளேன்; **இரும்பு முள்வேலி; வண்டிக்காரன் மகன்.**

கழகத் தோழர்களின் நன்மதிப்பினைப் பெற்றுள்ள பலர் தந்துள்ள கவிதைகள், கதைகள், கட்டுரைகள் மலரில் இடம்பெற்றுள்ளன.

இவைகளிலே ஒன்றுகூட, படித்துப் பொழுது ஓட்ட அல்ல! ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையை விளக்கிட! இந்த தனித்தன்மை இதழ்களை மட்டும் நடத்திடுவோர் கொண்டிடவோ, தந்திடவோ முடியாது; அவர்கட்கு அந்தமுறை, தேவையுமில்லை.

எடுத்துக்காட்டுக்காக-எரிச்சல் மூட்டவேண்டும் என்பதற்காக அல்ல—ஒன்று கூறுகின்றேன்; இன்று காங்கிரசாட்சியின் போக்கையும், ஒவ்வொரு நடவடிக்கையையும், கண்டிப்பதில், கேலி செய்வதில், இதழ்கள் பலவும் ஈடுபட்டுள்ளன; ஆர்வத்துடன்.

ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து அன்றாட நிர்வாகத்திலே நெளியும் ஊழல்கள் வரையில், ஆளுங்கட்சிக்குள் நெளியும் அலங்கோலங்கள் உட்பட, கண்டிக்கப்படுகின்றன, இதழ்கள் பலவற்றாலும்.

ஆனால், தாம் வலியுறுத்தும் பிரச்சினைகள், அளித்திடும் விளக்கங்கள், தந்திடும் அறிவுரைகள், விடுத்திடும் எச்சரிக்கைகள், துளியேனும், ஆட்சியின் போக்கை மாற்றிடுவதில் வெற்றிதந்துள்ளனவா என்ற கணக்குப் பார்க்கின்றனரா, இதழ் நடாத்துவோர் என்றால் இல்லை; வேறு கணக்குதான் பார்த்துக் கொள்கின்றனர்.

கண்டனத்தைக் கொட்டுகின்றனர், காரணங்களை அடுக்கி காட்டுகின்றனர், வாதங்களைத் திறமையாகச் செய்கின்றனர், ஆனால் வழக்கிலே வெற்றி கிட்டிற்றா என்பதுபற்றி மட்டும் பார்த்திட முனைவதில்லை. ஏன்? அவர்கள் இதழ் நடாத்துகிறார்கள்; ஆட்சியின் அக்ரமத்தை ஒழித்திடும் இயக்கம் நடத்தவில்லை. அவர்களிலே சிலர் தமது திறமையை விளக்குகிறார்கள், தீமையை ஒழித்திடும் செயலில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளாமலேயே! அவர்கள் பிரச்சினைகளைப் பற்றி நிம்மதியாகச் சிந்திக்கவும், நேர்த்தியாக விளங்கிடவும் தகுதி பெற்றவர்கள்; நிலைமையை மாற்றிட வேண்டும் என்ற மனத்திண்மை கொள்பவர்கள் அல்லர்.

கழக ஏடுகள் அவ்விதமானவை அல்ல.

அந்த ஏடுகள், கழகம் பெற்றுள்ள படைகலன்கள்.

கழகமோ, ஆட்சியின் அக்ரமத்தை ஒழித்திட அறப்போர் மேற்கொண்டுள்ள பாசறை.

ஆகவேதான் கழக ஏடுகளில் பிரச்சினைகளை விளக்கப்படுவது மட்டுமல்ல சிக்கல்கள் போக்கிட வழி கூறப்படுகிறது; அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன; குறிக்கோள் எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆக, நல்லாட்சி காணவேண்டும் என்பதற்கான ஆர்வம் கொண்டோர் எவரும், அதற்காக இயக்கம் அளித்திடும் இதழ்களை, ஏந்தித் தீரவேண்டிய படைக்கலன் என்று கொண்டிடவேண்டும். கழக இதழ்கள் மூலம் பெற்றிடும் பலன், இதனால் தனித்தன்மை வாய்ந்ததாகிறது.

எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், அதுகுறித்து சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் அதே இதழ்கள், சூடு தணிந்ததும், வேறு திசையிலே மக்களின் கவனத்தைத் திருப்பி விட்டுவிடுவதிலே முனைவதனைக் காணலாம்.

இந்த இதழ்கள் மட்டும், அறப்போர் மனப்போக்குடன், நல்லாட்சி கண்டாகவேண்டும் என்ற துடிப்புடன் பணிபுரிந்திடின், ஜனநாயகம் எவ்வளவோ அளவு செம்மைப்பட்டிருந்திருக்கும். ஆனால் அந்த முறையில் அவைகள் வேலை செய்யவில்லை.

அதனால் கழக இதழ்கள், வசதியும், வாய்ப்பும், வல்லமையும் அனுபவமும் கொண்ட மற்ற இதழ்கள் செய்திருக்கக்கூடிய—ஆனால் செய்யாது விட்டுவிட்டுள்ள—வேலைகளையும் சேர்த்துச் செய்திட வேண்டி இருக்கிறது. சுமை அதிகம்! ஆகவே பாடு அதிகமாகிறது.

நீண்ட பழங்காலந் தொட்டே—பணம்—பதவி-எனும் எதன் காரணமாக ஏற்படுவதாயினும்—செல்வாக்குக் கொண்டவர்களின் சீற்றத்துக்கு அஞ்சுவதும், புன்னகைக்கு விரும்புவதும், நம் நாட்டிலே இயல்பு ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது.

மந்தம், நிதானம் ஆக்கப்பட்டுப் பாராட்டப்படுவதும், கஞ்சத்தனதை சிக்கனம் என்று புகழ்வதும், துடுக்குத் தனத்தை அஞ்சாமை என்று கூறிப் பாராட்டுவதும், களியாட்டத்தில் ஈடுபாடு இருந்திடின் அதனைக் கலை ஆர்வம் என்றும், எவரையும் மதித்துக் கலந்து பேசிடாத போக்கை, சுயசிந்தனை என்றும், அகம்பாவத்தைக் கெம்பீரம் என்றும் கூறிப் பாராட்டுவோர் இருப்பதனைக் காண்கின்றோம்.

இந்தி ஆதிக்கப் பிரச்சினை பற்றித் தமிழக ஏடுகள் காட்டிய ஆர்வமும், தொடுத்த கண்டனமும் கொஞ்சம் அல்ல.

இன்றுவரையில் இந்த இதழ்கள் கேட்டுக் கொண்ட அளவிலேகூட ஆட்சிமொழிச் சட்டம் திருத்தப்படவில்லை.

என்ன செய்கின்றன இந்த இதழ்கள்?

அதனையும் எழுதுகின்றன!

எழுதிவிட்டு?

எழுதுகின்றன!

அவ்வளவுதான்!!

ஜனநாயகம் வலிவு பெறவேண்டுமானால் என்ன செய்திருக்க வேண்டும்? தட்டாமல் தயங்காமல் இந்த இதழ்கள், மக்களிடம் கூற வேண்டும், இந்தத் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்! இந்தி ஆதிக்க நோக்கத்துடனேயே இந்த ஆட்சி இருந்து வருகிறது. எமது வேண்டுகோட்களுக்கு எவ்வளவு மதிப்பும் தரவில்லை. இது அரசியல் அகம்பாவம். இந்த அகம்பாவம், சர்வாதிகாரத் திற்குத் தான் நாட்டை இழுத்துச் செல்லும். ஆகவே நாட்டினரே! இந்த காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று எழுதவேண்டும்.

எழுதுகின்றனவா?

இல்லை! ஏன்?

அவை, அக்கிரமத்தை ஒழித்தாக வேண்டும் என்பதற்காக அமைந்துள்ள படைக்கலன்கள் அல்ல! வண்ணம், வடிவம் பாரீர்! என்று கூறிடும், ஏடுகள்!!

எனவேதான் தம்பி! நான் மிக அதிகமாகவே வலியுறுத்திக்கொண்டு வருகிறேன் நல்லாட்சி காண வேண்டும் என்பதிலே நாட்டம் உள்ளோர், அந்த நோக்கத்துக்காகவே ஆக்கப்பட்டுள்ள படைக்கலன் போன்ற கழக ஏடுகளைப் பெரிய அளவில் ஆதரிக்க வேண்டும் என்பதனை.

வானவில்லின் வண்ணத்தைக் கண்டு வியந்திடலாம்; ஆனால் ஓவியம் தீட்டிய வண்ணக் கலவை நாம் தயாரித்துக் கொண்டாக வேண்டும். வானவில்லில் காணப்படும் வண்ணத்தை வழித்தெடுத்துக் கொள்ள முடியாது.

நிலவுப் பெண்

புலவர் ந. கருணாநிதி

நீல விசும்பிடை வந்தனளே!—உயர்
 நித்திலப் புன்னகை சிந்தினளே!
கோல மலர்முகம் காட்டினளே!—உடன்
 குங்குமப் பூவாய்ச் சிவந்தனளே!

ஆசை வெறியினை யூட்டினளே!—என்
 அகந்தனில் இன்பத்தை நாட்டினளே!
மாசில் முகிலிடைத் தோன்றினளே!—இன்பம்
 மாந்திட என்னை யழைத்தனளே!

ஆலைக் கரும்பாய்ச் சுவைத்தனளே!—என்
 ஆவி முழுதும் பறித்தனளே!
சோலைக் குயிலிசை பாடிடவே—என்
 தோளினிற் சாய்ந்து மயங்கினளே!

ஊனில் நிறைந்தே யுவந்தனளே!—என்
 உயிரிடை ஒன்றாய்க் கலந்தனளே!
தேனில் வரைந்த உருவினளே!—நிலவாம்
 தீந்தமிழ்ப் பேரைப் பெறுபவளே!

கழக ஏடுகளின் தனித்தன்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிக அளவில் உணரப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வேகம் நமது பணத்திற்குக் கிடைக்கும்.

இந்தப்பணி சிறப்படைய வேண்டுமெனில், பறித்தெடுத்த சிரித்திடும் முல்லையைப் பெற்றுச் சூடிக்கொள்ள எழில் மங்கை இருந்திடவேண்டும் என்பது போல, வடித்தெடுத்த வாளினை கரம் கொண்டு களம் சென்றிடத் தகுதி மிகு வீரன் கிடைத்திடவேண்டும் என்பதுபோல, கழக ஏடுகளைத் தக்க ஆதரவு கொடுத்து வளர்ந்திடச் செய்வதுடன், பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் உணர்ந்த பல்லோர் தேவைப்படுகிறன்றனர்.

அந்தப்பல்லோர், 'காஞ்சி' இதழினுக்கு ஊக்கமளித்து வருகின்றனர், தொடர்ந்து; தோழமையுடன். அவர்கட்கு நன்றி கூறிக் கொள்வதிலே மகிழ்ச்சி பெறுகின்றேன்.

'காஞ்சி' இதழுடன் தம்பி! உனக்கு ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு தெம்பு ஊட்டுவது மட்டுமல்ல, இதழின் எதிர்காலத்திற்கான ஒளியும் தந்திடுகின்றது.

போர்ட்டிலன் எனும் ஆங்கிலக் கவிஞன் கூறியதனை நினைவிற்கொள்ளுகிறேன்.

இரவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனால் பகலுக்கு ஒன்றே!
ஆயினும் சூரியன் மறைந்தால்
உலகத்தில் ஒளி இல்லையே!
அறிவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனால் நெஞ்சுக்கு ஒன்றே!
ஆயினும் அன்பு மறைந்தால்
வாழ்வில் ஒளி இல்லையே!

முத்தமிழும் முத்தும் முழங்கிடும் திருநாடு நம்நாடு. கத்தும் கடல் அடக்கிக் களம் செலுத்தி கடாரம்

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

சென்ருர் நம் இனத்தார். நாமணக்கப் பா பாடி நற்றமிழை நல்லவையைப் பாமணக்கச் செய்ய வந்த பாவலர்கள் தேனொத்த தீந்தமிழைத் தந்திடும் திருநாடு, நம்நாடு. எனினும்......?

ஓர் ஏக்கம்—ஓர் பெருமூச்சு—ஓர் குமுறல் அன்ருே, அந்த 'எனினும்' என்பதுடன் பிறந்திடக் காண்கிருேம். அந்த ஏக்கம் போக்கிட, பெரு மூச்சு நின்று ஓர் புன்னகை மலர்ந்திட குமுறல் அகன்று மனதிலே ஓர் நிம்மதி எழுந்திட, எடுத்துக்கொள்ளப் படும் இணையற்ற முயற்சியில், தனது பங்கினைச் செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்கிறது 'காஞ்சி.'

தம்பியாம் நீ திரட்டித் தந்திடும் பேராதரவே, 'காஞ்சி' இதழின் பணி செம்மையுடையதாகிடச் செய்திடும்.

'காஞ்சி' நடாத்திடும் இளங்கோவனும், உடனிருந்து பணியாற்றும் முத்துராமனும், சுந்தரேசனும் அவ்வப்போது கதை, கவிதை, கட்டுரை வழங்கிடும் நண்பர்களும், ஓவியம் தீட்டித் தந்திடுவோரும், இதழின் எழிலும் பயனும் மிகுந்திட வேண்டுமென விழைகின்றனர்.

எந்த எழிலும் தம்பி! உன் கரம் தந்திடும் எழிலுக்கு நிகராகாதன்ருே! இதோ என்னிடம்! என்னிட முந்தான்!!—என்று கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் 'காஞ்சி'யைக் கரத்தில் கொண்டு கூறிடுவதைக் காட்டிலும் இனிய இசை வேறு எது இருக்க முடியும்—என் செவிக்கு!

அந்த மகிழ்ச்சியினை அளித்துவரும் மாண்புக்கு நன்றி கூறி, 'மலர்' கண்டிடுவாய், மணம் நுகர்ந்திடுவாய் என்று அழைத்துத் தருகின்றேன் நாட்டுக்கு எழிலும் ஆட்சிக்கு ஏற்றமும் தேடித்தந்திடும் முயற்சியினை மேற்கொண்டுள்ள 'காஞ்கி' இதழின், இரண்டாம் ஆண்டு மலரினை.

அண்ணன்,

அண்ணாதுரை

இது ஒன்றும் பாரமல்ல

நூவண்டுப்போய் தள்ளாடியப் படியே போய்க் கொண்டிருக்கிருர் முத்தய்யாபிள்ளை, பாவம் நொந்துப்போன ஓய்வுப் பெற்ற கணித ஆசிரியர். அவருடைய உடம்பில் உள்ள-உயிரைத் தவிர மற்ற சப்த நாடிகளும் அடங்கிப்போய் விட்டன. வேம்பாய் கணிதம் கசக்கும் மாணவர்கட்கும் கரும்பாய் இனிக்கும்படி செய்தவர் தன்னுடைய திறமையால். ஆனுல்? அவருடைய வாழ்வே இன்று கசந்துப்போய் மரணதேவதையை மணந்துக் கொள்ளப் போய்க் கொண்டிருக்கிருர்.

அவருக்குப் பின்னுல் ஒரு சரித்திரமே இருக்கிறது. அந்த சரித்திரத்தை புரட்டிப் பார்க்கின்றவர்களுக்கோ அல்லது கிளறிபார்க்கின்றவர்களுக்கோ நிச்சயம் கண்ணில் நீர்த்துளிர்க்கும். நொந்துப் போன வாழ்க்கையைத் துவங்கிய அவர் இன்று நொந்து நைந்துப் போன உள்ளத்தோடு போகிருர்.

எவ்வளவு வேகமாக ஓடவேண்டுமோ அவ்வளவு வேகமாக ஓடவேண்டும் என்றுதான் நினைக்கிருர். கூடாத நினைவு. அவருடைய உடம்பில் அதற்கான சக்தி கிடையாது என்பது அவருக்குத் தெரியும். இருந்தும்கூட ஒரு சின்ன அல்ப ஆசை. அவருடைய உடம்பில் எலும்பும் அந்த எலும்புகள் கீழேவிழுந்து விடாமல் பிடித்துக்கொள்ள சிறிது தோலும் அந்த தோலையும்—உடல் மானத்தையும் காக்க வேஷ்டியும் மேலே கிழிந்து கந்தலாகிப்போன கோட்டும் சரட்டும் தான் அவரை மனிதராக்கிக் காட்டுகிறது. அந்த கோட்டுக் கூட அவருடைய கல்யாணத்திற்கு மாமியார் வீட்டில் தந்தது அந்தக் கோட்டைக் கேட்டாலேப் போதும் அது அவருடைய மனப் பழக்கத்தைச் சொல்லிவிடும். காரணம், அந்தக் கோட்டு தான் அவருடைய மனதோடு நாற்பது வருடமாக தொடர்புக் கொண்டிருக்கிறது.

பாவம் முத்தையாபிள்ளை பிறந்தபோதே தந்தையை இழந்தவர். முழுமையாக அவருடைய தந்தை முகத்தை ஒருமுறை கூடப் பார்த்ததாக அவருக்கு நினைவில்லை. ஒருநாள்கூட அவர் மூன்று வேளையும் சாப்பாடு சாப்பிட்ட நாள் இன்று வரை இல்லை. பிறந்தபோது வறுமையின் கொடுமை—சம்பாதித்த நாட்களில் பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டுமே என்ற கவலை.

த. மலரடியான்

கவலையையும், மனப் புழுக்கத்தையும்தான் அவருடைய வாழ்வில் அவர் முழுமையாக நுகர்ந்தவர்.

தட்டுத்தடுமாறி ஆசிரியர் பயிற்சிப் பெற்று ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக சேர்ந்த பொழுது அவருக்கு மாதச் சம்பளம் பதினேழு ரூபாய். அவருடைய முதல்மாத சம்பளம் அவருடைய அம்மாவின் சவ அடக்கச் செலவிற்குத்தான் பயன்பட்டது. அவருடைய அம்மா தன் மகன் சம்பளம் வாங்கும் அந்த மகிழ்ச்சியான நாளைப் பார்க்காமலேயே போய் விட்டார். தாய் போன பிறகு தனிமரமான அவர் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு அவர் வேலை செய்துவந்த பள்ளி தலைமை ஆசிரியர், ஒரு பெண்ணை முத்தையாவிற்கு மனைவியாக்கினுர்.

முத்தையாவின் மனப்போக்கிற்கு ஏற்றுர்போல் அமைந்து விட்ட அருமையான மனைவி. மகா சிக்கனமும் பொறுமையும் மிகுந்தவர் கணவரின் பால் அன்பையும் பாசத்தையும் வைத்திருந்த அவர் கணவரின் நிலை கண்டு சிலசமயங்களில் இரத்தக் கண்ணீர் சொறிவார். அப்படிப் பட்ட மனைவியை நினைத்து தனிமையில் முத்தைய்யா ஆனந்தக் கண்ணீர் விடுவார்.

திருமணம் ஆன மறு ஆண்டு முத்தைய்யா தந்தையானுர். அதன் பின் ஆண்டுகள் ஓடின. அவருக்கு வயதுகள் ஏறின. இருந்தும் அவர் தந்தையாகவே இல்லை. ஒரேபிள்ளை, அதுவே அவருக்குப் போதுமானதாக இருந்தது.

அவருடைய எண்ணமெல்லாம் தன்னுடைய பிள்ளை படிக்க வேண்டும் நிறைய படிக்கவேண்டும். ரொம்பரொம்ப படித்து பெரிய உத்தியோகத்தில் இருக்க வேண்டும் என்பது அதற்காக அவர் செலவை குறைத்தார். அவருடைய மனைவி அவருடைய திட்டத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

ஆண்டுகள் ஓடுகின்றன. அவருடையசிந்தனைகள் திட்டங்கள்செயலாகின்றன. அவருடையஎண்ணம் கோட்டையாகின்றன. அவருக்கு மகிழ்ச்சியால் உடல் எல்லாம் பூரிக்கின்றன. அவருடைய மகன் விஷ்ணுபாரதி படிக்கின்ருன் பாஸ் ஆகின்ருன் அவருக்கு தித்திப்பான செய்திகளாகவே ஆண்டுதோறும் வந்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு முழுவடிவை பெறுகின்றது அவருடைய எண்ணம். மகன் கல்லூரிப் பேராசிரியராக நியமிக்கப்படுகின்ருன். அந்த மகிழ்ச்சியில் மறு வருடம் ரிட்டையராகப்

போகின்றோமே என்ற கவலைக்கூட அவரை அண்டவில்லை. உலகத்தில் ஒரு மாபெரும் சாதனையை நினைத்து முடித்துவிட்டப் பெருமை அவருக்கு ஒரு பெரும் வெற்றியாக தெரிந்தது.

உண்மைதான். தன்னுடைய மகனுக்கு சொத்துவேண்டாம்— வீடு வேண்டாம் நிலம் நீர் வேண்டாம். படிப்பு ஒன்றேபோதும் என்ற அவருடைய எண்ணம் நிறைவேறி விட்டது.

பதவி விட்டு விலகிய மறு ஆண்டு, பதவிவிலகும் போது வந்தப் பணத்தைக் கொண்டு சீறும் சிறப்புமாக மகனுக்கு கண்ணுக்கு அழகாக திருமணம் செய்து வைக்க முடிவு செய்து பெண் பார்த்தார்.

அவருடைய தகுதியை மீறி— அவருடைய நிலைமையை தாண்டி அவருடைய மகனுக்கு வரன் கிடைத்தது. பெண் முடிந்தபின் அவர் ஒருமுறை கிள்ளிப் பார்த்துக் கொண்டார். அதன்பின் தான் அவருக்கு சந்தேகம் தெளிந்தது.

விஷ்ணுபாரதியின் திருமணம் முடிந்தது. அவனுக்கு வாய்த்த பெண் செல்லப்பெண். ஒரே ஒரு பெண் தன்னுடைய மகளையும் மருமகனையும் தன்னுடனே வைத்துக் கொள்ள எண்ணமிட்டு செயல்படவும் ஆரம்பித்தனர் பெண்வீட்டார். விஷ்ணுபாரதியும் அதற்கு தடையேதும் சொல்லவில்லை. அவனுக்கு தன்னுடைய தாயையும் தந்தையையும் தள்ளாத வயதில் தனியாக விட்டு விடுகிறோமே என்ற கவலையையும் காணோம்.

ஆறுமாதங்கள் நகர்கின்றன. வசதியான வாழ்க்கையில் திளைத்துப்போய் இருக்கின்றான் விஷ்ணுபாரதி. அவனுடைய மாமனார் விஷ்ணுபாரதியை வேலையை விட்டு விட்டு தன்னுடைய கம்பெனியை நிர்வகிக்கும்படி சொல்கின்றார். ஆனால் அவன் அதை மறுத்து விடுகின்றான்.

தன்மானமுள்ள முத்தைய்யா பிள்ளை தள்ளாத வயதிலும் தன்னுடைய மகன் தன்னுடன் இல்லையே என்ற கவலை நெஞ்சை அரித்தாலும் தனியே இருக்கின்றார். மாதம் ஒருமுறை விஷ்ணுபாரதி பணம் ஏதோ கொஞ்சம் தருகின்றான். எப்பொழுதாவது ஒருமுறை மாதத்தில் வருவான் அதோடு சரி,

ஏழாவது மாதத்தில் ஒருநாள். முத்தையாபிள்ளையின் மனைவி நோய் வாய்பட்டு படுக்கையில் இருக்கிறார். மகன் வந்து பார்க்கவில்லையே என்ற கவலை அந்த தள்ளாத வயது தாய்க்கு. ஒரு முறை கடிதம் எழுதிவிட்டாகிவிட்டது. இனி எழுதுவதில் நியாயமும் இல்லை அதற்கு தன் தன்மானமும் இடம் தராது என்று முத்தைய்யா பிள்ளைக்குத் தீர்க்கமாக தெரியும்.

மேலும் ஒருவாரமாகிறது. முத்தையாவின் மனைவி காமாட்சியின் நிலைமை மிகவும் மோசமாகிறது. பாவம் கையிலே காசில்லாத நிலையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கிறார்.

காலத்தின் கொடுமையை எண்ணிச் சிரிப்பதா கலங்குவதா என்று புரியாமல் திக்பிரம்மை பிடித்தவர்போல் ஜெனரல் ஆஸ்பத்திரியே கதி என்று கிடக்கிறார்.

அவருக்கு ஆறுதல் சொல்லவோ தேறுதல் மொழிகூறவோ ஆள் இல்லாத நிலையில் போக்கிடம் எது வென்று புரியாத குழப்பத்தில் கலங்கிப் போயிருந்த பொழுது:-

ஒருநாள் விஷ்ணுபாரதி தன் மனைவியோடு வருகிறான். வந்தவன் சில நிமிடங்கள்; சில வார்த்தைகள் என்பதோடு விடைபெறுகிறான்.

படுக்கையிலே கிடக்கும் தன் மாமியார் குணமாக வேண்டும் என்ற எணணமே இல்லாது, வேண்டாத அன்னியரைப் பார்க்க விரும்பாத மனத்தோடு வந்திருப்பவள் போல் வந்திருக்கின்றாள் விஷ்ணு பாரதியின் மனைவி.

அவளுடைய கணவனே தன் தாயைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வரவில்லை. அவளுக்குமட்டும் எங்கே அந்த பாசம் உதிக்கப் போகிறது.

ஒருமாதங்கள் முழுமையாக கறைகிறது. விஷ்ணுபாரதி இரண்டுமுறை வந்து தன்தாயைப் பார்த்ததோடு சரி அதன்பின் வரவே இல்லை. தன்னுடைய வாழ்வில் உள்ள ஒரே ஒரு பிடிப்பு தன்னுடைய மனைவி. தன்மனைவி போனபின் தன்னால் தனியாக இந்த உலகில் வாழமுடியாது என்ற கவலை அவரை அசுர வேகத்தில் உலுக்கியது. அவருடைய எண்ணத்தில் நியாயம் உண்டு.

நொந்துபோன அவருடைய உள்ளத்திற்கு ஆறுதல் அவருடைய மனைவி குணமாகி வருவது தான். ஆனால் அந்த நம்பிக்கையை டாக்டர்கள் கைவிட்டு ஆறு மணிகளுக்குமேல் ஆகிவிட்டது. தன் மனைவி தன்னை விட்டு போய்விடப் போகிறாள் அதற்கு முன் தற்கொலை செய்து கொண்டாவது, தான் முந்திவிட வேண்டும் என்ற எண்ணம். ஆனால் ஒரு வேளை காமாட்சி பிழைத்து விட்டால்...? அதற்குமுன், தான்போய் விட்டால்...? அவளுக்கு ஆறுதல் யார்...? அவருடைய எண்ணம் திசைதிரும்புகிறது. மனைவியிருக்கும் கட்டிலருகே கவலையே உருவான நிலையில் கிடக்கிறார்.

நிமிடங்கள் பறக்கின்றன. அவருக்குத் தெரியும் இன்னும் கொஞ்ச நேரம் டாக்டர்களின் கணிப்பில் இருந்து தன் மனைவி தவற முடியாது என்று. அவள் போய்விட்டபின்...? இந்த பரந்த உலகில் பிறக்கும்போது மற்றவறை நம்பியா பிறந்தார். தன் மகன் பின்னால் உதவுவான் என்றெண்ணியா படிக்க வைத்தார் அதோடு:—

மாலையாவோம் என்று மலர்கள் மலர்வதில்லை.

ஆடையாவோம் என்று பட்டு பிறப்பதில்லை

பின்...? மற்றதெல்லாம் விதி

கவலை என்ன அவருக்கு.

வறுமையின் பிடிப்பிலே பிறந்து வறுமையின் பிடியில் இருந்து விடுபடவில்லை அவர். ஆனால் வாழ்வின் பிடியில் இருந்து விடுபட முடிவு செய்துவிட்டார்.

தன்மானமுள்ள முத்தைய்யா பிள்ளை தன் மனைவியின் கட்டிலருகே இருக்கிறார்.

மாலை ஆறுமணி கடைசி துடிப்புகள் அடங்க நேரம் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. காமாட்சி கண்களை லேசாக திறக்கிறார்; ஏதோ பேச அவருடைய உதடுகள் துடிக்கின்றன. வார்த்தைகளை வெளியேற்ற வாயை திறக்கிறார். ஆனால்:—

அதற்குமுன் காமாட்சியின் ஆவி வெளியேறி விடுகிறது. கோவென்று கதறி அழமுடியாமல் இடிந்துபோய் விடுகிறார் முத்தைய்யாபிள்ளை.

ஆஸ்பத்திரியின் சம்பரதாயங்கள் நடைபெறுகின்றன. கையிலே செல்லாத காசுகூட கிடையாது.

பட்டமரம் சொன்ன கதை

அ. குமாரசாமி

சில்லென்ற காற்றும் நிழலும் தந்து
சிறப்பான காதலுக்கு வழியும் வந்து
ஊரறிய திருமணந்தான் செய்து கொள்ள
உறுதுணையாய் ஒருநாளில் இருந்தேனய்யா!

கொத்தும் கிளியதனின் பசியைப்போக்க
சத்துள்ள கனிகளையே நானும் ஈந்து
கத்தும் கிளியதற்குக் களிப்பைத் தந்த
கதையெல்லாம் எனக்குண்டு அறிவீரய்யா!

பிஞ்சுகளை, நான்வளர்த்த காலந்தன்னில்
குஞ்சுகளைக்காக்கத்தான் காக்கை வந்து
கூண்டுக்களைக் கட்டியே வாழ்ந்த காலம்
நான் சொல்லித் தெரியவா வேண்டுமய்யா?

என் கையை வெட்டியே ஏருழவர்கள்
ஏர் கலப்பை செய்திட்டார் அந்த நாளில்
நன்றியை மறப்பது நன்று என்று
நடக்கின்ருர் மனிதர்கள் இந்த நாளில்

காலத்தின் கோலத்தால் கெட்டுப்போனேன்
கயவர்கள் வெட்டியதால் பட்டுப்போனேன்
காஞ்சிப்பட்டு என்ருல் என்னை மதிப்பார்! நானே
காய்ந்து, 'பட்டுப்' போனேன் யார் மதிப்பார்?

சிறகில்லாப் பறவைகளும் என்னைப் பார்த்து
சிரிக்கின்ற நிலைக்கு நான் சிலையாய் நின்றேன்!
விறகில்லா வீட்டார்கள் என்னை வெட்டி
வீழ்த்துகின்ற சோகத்தை என்ன சொல்வேன்?

வெந்திட்டால் கரியாவேன்! அதற்குப்பின்னே
நொந்திட்டால் நெருப்பாவேன்
அணிவீர் நீங்கள்!
சிந்தித்தால் மனிதர்களே நும்நிலையை
சிரிப்புத்தான் வருகுது! ஐயோ பாவம்!

அன்றுநான் இருந்திட்ட வளத்தைக் கண்டு
கவியொருவன் பாராட்டி எழுதியுள்ளான்!
இன்று என் இழிவான நிலையைக் கண்டு
எழுதிடத்தான் யார்வருவார்!
வரைந்தேன் நானே!

[உரைநடைக் கவிதை]

பின் எப்படி அவர் தன் மனைவியின் அந்திம கிரியை முடிப்பார்.

முப்பதாண்டுகள் தன் இன்ப துன்பங்களில் பங்கேற்றவளுக்கு தன்னல் ஈமக்கிரியைக்கூட செய்ய முடியவில்லையே என்ற கவலை தொண்டையை அடைக்கிறது.

ஆனல் இறந்து கிடக்கும் அவருடைய மனைவி என் ஈமைக்கிரியை நடத்த மகனிடம் போய் உங்கள் தன் மானத்தை விற்காதீர்கள் என்பது போல் அவளுடைய முகம் இருந்தது,

கடைசி முறையாக தன் மனைவி காமாட்சியை பார்த்துவிட்டு தன்னை மன்னிக்கும்படி வேண்டி விட்டு வெளியேறி விடுகிருர். அவருக்குத் தெரியும் யாரும் இல்லை என்ருல் ஆஸ்பத்ரியே தன் மனைவிக்கு கடைசி பயணத்தை ஏற்பாடு செய்துவிடும் என்று. அவருடைய கால்கள் வேகமாக நடைப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

அவருடைய உள்ளத்தில் எண்ணச் சுழல். தன்மானமுள்ள முத்தையா பிள்ளை தன் மகனிடம் போய் வாழ விரும்பவில்லை. தன் மனைவியே போய் விட்டபின் அவரும் அங்கேயே போய்விட தீர்மானித்து வேகமாக நடையைப் போட்டுக் கொண்டிருக்கிருர்.

கேரளாவை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது கொச்சின் எக்ஸ்பிரஸ். சற்றுமுன் தான் பேசின்பிரிட்ஸை தாண்டியது. தாண்டும் போது ஒரு தன்மானமுள்ளவனை துண்டித்து விட்டோம் என்று கவனிக்க வில்லை-நினைக்கவில்லை- நேரமில்லை, அந்த கொச்சின் எக்ஸ்பிரஸ்க்கு.

எத்தனையோ டன் எடையுள்ள வண்டி தன்மீது ஏறி தன் உடலை துண்டாக்கி விட்டதே என்று அவர் நினைக்கவில்லை நினைக்கவும் முடியவில்லை. அவர் பிணமாகி விட்டார்.

இது என்ன பாரம் அவருக்கு. எத்தனையோ கஷ்டங்களை கடந்து தாங்கி வந்த அவருக்கு சாதாரண வண்டி ஒன்றும்பாரமல்ல. பாரமான வாழ்க்கையைக் கடந்த அவருக்கு தன்மேல் கடந்த வண்டி ஒன்றும் பாரமாகயிருந்திருக்காது.

தொடர் கதை :

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

குளிரில் மழையில் நடுங்கி;ஒடுங்கி, நடந்துவரும் குட்டிப்பூனை போலக் கூசிக் குறுகிக் கூனி நிலம் நோக்கித் தலைகவிழ்ந்து நாணச் சிலையாகப் பாலு நடந்து சென்றாள்.

அந்த அறையில் வீணை மின் விளக்கு எரிவதைப் பிறகு உணர்ந்த முகிலன், மேலே சென்று குமிழை அழுத்தி அணைத்து விட்டு மீண்டான்.

இவர்கள் சாலையோரத்திற்கு வந்தவுடன் ஒரு மகிழுந்து வந்து நின்றது.

கரிகாலன் கீழே இறங்கினான்.

"அட, முகிலன்! நீதானா?"

"வா, கரிகாலன். என்ன இதற்குள் வந்து விட்டாய்?"

"சரி. வண்டியில் ஏறு, பேசலாம்.

பாலு, திருமாவளவன், முகிலன் முதலியோர் மகிழுந்தில் ஏறினர். வண்டி விரைந்தது சென்னையை நோக்கி.

"முகிலன்" என விளித்தாள் பாலு,

முகிலன் 'என்ன?' என்பதுபோல நோக்கினான்.

"என்னை, அண்ணனிடம் உடனே சேர்ப்பித்து விடுங்கள். அவனுக்குத் தொலைபேசி வழியாகச் செய்தி அறிவித்தால் போதும்."

"உன்னை நானே திண்டிவனத்திற்கு அழைத்துச் சென்று உன் வீட்டில் விட்டுவிடுவேன். கவலைப் படாதே. நான் என்ன நச்சினார்க்கினியரா? இல்லை, வழுதியா? மற்ற பெண்களைப் போல நீகூடக் கோழையாக இருக்கலாமா? பலரோடு பல நிலையில் பல இடங்கில் பழகித் தெளிந்தவள் தானே நீ? மேனாட்டு நாகரிகத்தின் மரபே உன்னால்தானே பாலு இங்கே வாழ்கிறது? நீ அழலாமா? புதுமைப் பெண்ணினத்துக்கே மானக் கேடல்லவா? ஐயோ! ஐயோ!"

முகிலனின் சொற்கள் ஒவ்வொன்றும் கூறிய எரியீட்டிகளாக பாலுவின் உள்ளத்தைத் தாக்கித் தகர்ந்தன. துன்பக்கடல் பொங்கிப் பரந்தது.

தன்னை முகிலன் கொன்று விட்டால்கூட இவ்வளவு கொடுமையாக இராதே என எண்ணினாள் பாலு.

திருமாவளவன் திடீரெனச் சிரித்தான்.

"என்ன வளவன்?" என முகிலன் கேட்டான்.

"வழுதி மாந்தோப்பை நோக்கி உள்ளுறவோடு ஓடிய காட்சியிருக்கிறதே அதை நீ பார்க்கவில்லையே! அவனை ஒலிம்பிக்கு போட்டிக்கனுப்பினால் நம் நாட்டுக்கே முதலிடம் கிடைத்திருக்கும்!" என்றான் நகைச் சுவையோடு.

"ஊம். அங்கே ஓடமாட்டான். அங்கேயும் இன்றைக்கு நடந்தது போல யாரேனும் உதைப் பதற்குத் துரத்தி வந்தால் என முகிலன் கூறினான்.

பாலு அடக்கமாட்டாது விம்மினாள்.

"அழாதே பாலு. ஆண்களோடு பழகுவதில் என்ன தீங்கு என ஒரு நாள் கதையளந்தாயே! ஆண்களின் அழகைப் பார்த்தாயா? ஆசைக்குத் துணையாக வந்தவன் அடி உதை என்றதும் ஆடையணிகளைக்கூடக் கவனிக்காமல் ஓடிவிட்டான்!... உம்..."

ஓடும் வண்டியிலிருந்து 'சடாரென'ப் பாய்ந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்ளலாமா என வெறி மூண்டது. ஆனால் உயிர்மேல் உள்ள ஆவல் அந்த எண்ணத்தை விழுங்கி விட்டது.

பாலு விம்மும்போது அவள் தோள், உடல் தூக்கிப் போட்டுக் குலுங்கியது. கண்ணீர் வரிகள் கன்னத்தில் சுவடு பதிந்தது.

அளவுக்கு மீறிய ஆவலோடு, கட்டுக்கடங்காத வெறியோடு வாழ்க்கையை—அதன் இன்பங்களைச் சுவைத்துத் தீர்த்துவிட, அலைகின்றவர்கள் மானங் கெட்டு மறுகி மாளாத துன்பத்தில் வீழ்ந்து துடி துடிக்கத்தான் நேரிடுகிறது, என எண்ணிய முகிலன் பாலுவின் நிலையைக் கண்டு உருகினான்.

'பாலுகூட இதுபோல கூனிக்குறுகி இருப்பாளா! அடா! அடா! செருக்குக் கொடுமுடியில் திரிபவளாயிற்றே செம்மாப்போடு! அவளுடலின் அணுவுக் கணுவும் பெருமிதப் பேறுற்றே!' என எண்ணினான் முகிலன்; பெருமூச் செறிந்தான்.

எண்ணாததெல்லாம் எண்ணினாள் பாலு.

தன்னைச் சுவைக்கத் தவிதவித்துத் துடித்து வந்த வழுதி, துன்பம் வந்ததும், தான்மட்டும் தப்பி ஓடிப் பேடியைப்போல ஒளிந்து கொண்டதை எண்ணியதும் அவளுக்கு உருசியப் புரட்சியும், பிரஞ்சுப் புரட்சியும் ஒன்றாகக் கலந்து உள்ளத்தில் தோன்றியதோ என்னுமாறு சீற்றப் புரட்சி மூண்டது.

'அவனைப் பழிக்குப்பழி வாங்கினால்தான் என்னுள்ளம் ஆறும்.' எனக் கருவினாள்.

'முகிலன் கடுமையாகப் பேசினாலும், முரடனின் வேட்டை வெறியிலிருந்து என்னை மீட்டாரே! அவருடைய உதவி இல்லையென்றால் அந்தக் கொடியவர்கள் என்னைக் கடத்திக் கொண்டு போய் என்னென்ன கொடுமை செய்து...அப்பா! நினைத்

"விரைவில் வெளிவருகிறது"

"பாபு பதிப்பகம்"
எண். 37 வாத்தியார் தோட்டம்,
ரெங்கராசபுரம், சென்னை. 24

பேரறிஞர் அண்ணாவின் கல்லூரி சொற்பொழிவுகளும்,
அரசியல் சொற்பொழிவுகளும் இணைந்து

"அரசியல் உலகில் அண்ணா"

(தொகுப்பு சி. என். ஏ. பாபு)

என்ற தலைப்பில் சிறந்த ஒரு சொற்களஞ்சியமாக
விரைவில் வெளிவர இருக்கிறது.

இங்ஙனம்,
"பாபு பதிப்பகம்."

மொத்தமாக வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"பாபு பதிப்பகம்"
எண். 37 வாத்தியார் தோட்டம்,
ரெங்கராசபுரம், சென்னை. 24

குறிப்பு; விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

தாலே நடுங்குகிறது!..." என நன்றியோடு நினைத்தாள்.

'முகிலனிடம் நம் நடத்தைபற்றி உண்மை 'கையுங்களவுமாக'ச் சிக்கிக் கொண்டதே! அவனுக்கு நம் திட்டமெல்லாம் தெரிந்துள்ளனவே! அப்பா! பொல்லாத ஆள்! எவ்வளவு ஆறிவாற்றல்! செயல் திறனில் முகிலனை வெல்ல எவனுமிருக்க முடியாது! எப்படியோ என் திட்டங்களை யெல்லாம் ஒற்றறிந்து அதற்கு எதிர் நடவடிக்கையை எடுத்து...சீ! சீ! பகைவரும் வியந்து திகைத்திடும் ஆற்றல் இருக்கிறதே!' என எண்ணினாள்.

அவள் நாடி நரம்புகளில் கிடுகிடுஎன நடுக்கமும், உடன் ஓர் இன்பச் சிலிர்ப்பும் பாய்ந்து பரவின.

இருளைக் கிழித்தோடிய மகிழுந்து சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

39

நள்ளிரவு

மணி இரண்டு.

அதியமான் வீட்டுத் தெருக்கதவை அஞ்சல் நிலையத்து ஆள் 'தடதட'வெனத்தட்டி, 'ஐயா! ஐயா!' என அழைத்தான்.

விழுத்த அதியமான் தெருவிளக்கை ஒளிரச் செய்து, கதவைத் திறந்தார்.

வந்தவன், ஒரு தாளைக் கொடுத்தான்.

'திண்டிவனத்திலிருந்து தொலைபேசி வழி பேச அழைக்கப்படுவதாக அறிந்து திடுக்குற்றார். கையெழுத்திட்டு அஞ்சலாளை அனுப்பிவிட்டு விரைந்து சென்று புகழேந்தியை எழுப்பினார்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்த புகழேந்தி ஒன்றும் புரியாமல் 'என்ன?'வெனக் கேட்டான்.

பொற்றொடியாரும் விரைந்தணுகினர்.

"புகழேந்தி அஞ்சல் நிலையம் வரை சென்று வரலாம். தொலைபேசியில் உன்னோடு பேச அழைப்பு வந்துள்ளது" என்றார் அதியமான்.

உடனே சட்டையணிந்து கொண்டு புகழேந்தி புறப்பட்டான்.

'அம்மாவுக்கு உடல்நலமில்லையோ? வேறென்ன நேர்ந்திருக்கும்?...ஒன்றும் விளங்கவில்லையே!' எனக் குழம்பினான்.

அஞ்சலகத்தினுள் சென்றமர்ந்தனர். விரைவில் தொடர்பு கிடைக்கவில்லை. நேரம் நகராததுபோல உறைந்திருந்தாக அதியமானும் புகழேந்தியும் உணர்ந்தனர்.

புகழேந்தியின் உடலில் மெல்லென நடுக்கம் நிலவியது. தன்னைத்தானே அவன் வெறுத்துக் கொண்டான். செய்தி என்னவென்றே தெரியாமல் ஏன் நடுங்க வேண்டும்?' என உள்ளத்திற்குத் துணிவு என்னும் முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்தினான்.

(வளரும்)

செய்தித் திரட்டு

காவிரி தண்ணீர் பிரச்சனை :

காவிரி தண்ணீர் தகராறுபற்றி டெல்லியில் நடந்து வந்த பேச்சு வார்த்தை முடிந்தது. டெல்லி சர்கார் நீர்ப்பாசன மந்திரி கே. எல். ராவ் முன்னிலையில் நடந்த இந்த பேச்சு வார்த்தையில் மைசூர் முதல்மந்திரி தேவ ராஜ் அர்சு, கேரள மந்திரி திவாகரன், தமிழக மத்திரிகள். ப. உ. சண்முகம், சாதிக்பாட்சா ஆகியோர் கலந்து கொண்டனர். நீர்ப்பாசன இலாகா செயலாளர் சி. சி. படேல் தலைமையில் உள்ள ஒரு குழு 3 மாநிலங்களுக்கும் முதலில் சுற்றுப்பயணம் செய்து, 3 மாநிலங்களின் கருத்தை அறிந்த பின்னர் இந்த பிரச்சினை பற்றி ஆராய்ந்து ரகசிய அறிக்கையை டெல்லி மந்திரி கே. எல். ராவ்விடம் தாக்கல் செய்யும். அதன் பின்னர் 3 மாநிலங்களை சேர்ந்த முதல்மந்திரிகள் மீண்டும் சந்தித்துப் பேசி இறுதி முடிவு எடுப்பார்கள். அண்மையில் டெல்லி சென்று இருந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்கனவே காவிரி நீர்ப் பிரச்சினைப்பற்றி புதுடில்லியில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அமைச்சர் கே. எல். ராவுடன் பேசினர்.

ஐ. நா. வில் இந்திய பிரதிநிதி:

ஐ. நா. வில் இந்தியப் பிரதிநிதி பேசுகையில், அரபு நாடுகளுக்கு இந்தியாவின் முழு ஆதரவைத் தெரிவித்தார். மத்திய கிழக்கில் மீண்டும் சமாதானம் ஏற்பட வேண்டுமானல் 1967 சண்டையில், தான் வசப்படுத்திக் கொண்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸாக வேண்டுமென்ரூர். இந்தக் கொள்கையைப் பந்தோபஸ்து சபை முழுமையாக ஏற்றுக்கொண்டாலொழிய, போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்பது நியாயமாகாது. இப்போதைய சண்டை நிற்கவேண்டுமென்றுதான் இந்தியா விரும்புகிறது. ஆனல், இஸ்ரேலிய துருப்புகள் வாபஸாக ஆரம்பித்த பிறகுதான் சண்டை நிற்க முடியும் என்று இந்திய பிரதிநிதி கூறினர்.

மேற்காசியப் போர்; உலகப்போராக மாறும்! கிசிங்கர் கூற்று.

மேற்காசியாவில் (மத்திய கிழக்கு) இப்போது நடக்கும் போர் உலகப் போராக அதாவது அணு ஆயுதப்போராக மாறி விடக் கூடிய போராயும் இருக்கிறது என்று அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ஹென்றி கிசிங்கர் எச்சரித்தார்.

அணு ஆயுதங்களை வைத்துள்ள உலகின் இரு பெரும் பேரரசுகள் தாங்கள் விரும்பாமலேயே நேருக்கு நேர் மோதிக் கொள்ளக் கூடிய பேரபாயம் உள்ளது.

1914-ஆம் வருடத்து முதல் உலகப் போர் இத்தகைய ஒரு சூழலில்தான் மூண்டது.

இவ்வாறு கிசிங்கர் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

யு. எஸ். உப ஜனதிபதி அக்னு ராஜிநாமா

அமெரிக்க உதவி ஜனதிபதி அக்னு ராஜனமா செய்து விட்டார். 1967-ம் ஆண்டில் வருமானவரி கட்டாமல் ஏய்த்ததாக தமது மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டை அக்னு ஒப்புக் கொண்டார். அவருக்கு 10,000 டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. ஜெரால்டு போர்டு என்பவர் இப்போது யு. எஸ். உப ஜனதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரா எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, மதுராவில் நம் நாட்டின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்புச்சாலைக்கான அடிக்கல்லை நாட்டினர். மதுராவில் கட்டப்படும் நிறுவனம், 60 இலட்சம் டன் எண்ணெயைச் சுத்திகரிக்கும்; இதைப் பிற்பாடு 70 இலட்சம் டன்னுக விரிவுபடுத்த முடியும். இந்த சுத்திகரிப்புச்சாலை 1978ல் இயங்கும். சோவியத் கடன் மற்றும் தொழில் நுட்ப உதவியுடன் கட்டப்பெறும் இந்த சுத்திகரிப்புச் சாலை இந்தியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆற்றலை அதிகரிக்கும். மதுரா சுத்திகரிப்புச்சாலையானது, நான்கு செயற்கை உர ஆலைகளுக்குத் தேவையான பொருள்களை வழங்கும்.

சோவியத்—இந்திய உறவுகளின் வரலாற்றில், 1973-ஆம் ஆண்டு ஒரு முக்கியமான மைல் கல்லாகும். ஏனெனில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, 1953ல், சோவியத்—இந்திய நீண்டகால வணிக ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அன்று நடைபெற்ற வருடாந்திர வணிகத்தின் மதிப்பு 1.3 கோடி ரூபாய். 1973 ஆம் ஆண்டில் பரஸ்பர வணிகத்தின் மதிப்பு 410 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இன்று இந்தியாவின் ஏற்றுமதிகளில் கால் பங்கு, சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளுக்கும் செல்லுகிறது.

பொருளாதார ஒத்துழைப்பு விரிவாக்க இந்தியா—நேபாளம் உறுதி

இந்தியாவுக்கும், நேபாளத்திற்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேலும் விரிவு படுத்தவதென்றும் சர்வதேசத் துறையில் இரு நாடுகளும் நெருக்கமாகச் செயல்படுவதென்றும் இந்தியாவும், நேபாளமும் உறுதி தெரிவித்தன.

இந்தியாவுக்கு முதன்முறையாக அரசு முறையில் விஜயம் செய்துள்ள நேபாள மன்னர் விரேந்திரா இந்திய பிரதமருடன் பேச்சு நடத்தினர். இருதரப்பு உறவுகள், இந்திய உப கண்டப் பிரச்னைகள் சர்வதேச நிலவரம் ஆகியவை குறித்துப் பேச்சுக்கள் நடந்தன.

தொகுப்பு :- கே. எஸ். ராஜன்

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



பன்னிரண்டு ஆண்டுகளில்
வருவாய் இரட்டிப்பாகிட
தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்;—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
89, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.